பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 17 ஞாயிற்றுக்கிழமை 01.01.2023 கதிர் 308

## கிளிநொச்சியில் இளைஞர் கொலை

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம் கிராமத்தில் 26 வயது இளைஞர் ஒருவன் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீடு புகுந்த மர்மநபர்கள் 2



## எந்தவொரு தரப்புக்கும் பாதகம் இல்லாத தீர்வு

### தனது இலக்கு அதுவே என்கிறார் ரணில்

நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகம் இல்லாத வகையில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பது தான் எனது இலக்கு. தீர்வைக் காண்பதற்கான பேச்சுப் பயணம் இந்தப் புத்தாண்டில் வெற்றிகரமாக நடைபெறும் என்று நம்புகின்றேன். தீர்வு காணும் விடயத்தில் இயலாத்தன்மை வருமாயின் அதை 2

## அடுத்த சர்வகட்சிக் கூட்டம் எப்போது? இந்த வாரம் அறிவிப்பு வெளியாகும்

அடுத்த சர்வகட்சிக் கூட்டம் எப்போது இனி இடம்பெறும் என்பது தொடர்பில் இந்த வாரம் கட்சித் தலைவர்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்று தெரியவருகின்றது.

இதேவேளை, தமிழர் தரப்பு விடயங்கள் தொடர்பாகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரத்தியேகமாகச் சந்திப்பார் என்றும் அறியமுடிகின்றது.

அவை ஜனாதிபதியின் தனிப்பட்ட சந்திப்பாக இருக்கும் என்றும் தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்புக்களில் துறைசார் அமைச்சர்கள், பொறுப்பான அதிகாரிகள் கலந்து கொள்வார்கள் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றும் அறியமுடிகின்றது. 2

## சிறுமியைச் சீரழித்த 2 தமிழ்ப் பொலிஸார்

### காணொலியை வெளியிட்டும் மிரட்டல்



யாழ்., பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறுமியை இரண்டு ஆண்டுகளாக தொடர்ச்சியாகப் பாலியல் வன்புணர்வுக்கு இரண்டு தமிழ் பொலிஸார் உட்படுத்தியுள்ளமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் சிறுமியை வன்புணர்வுக்குஉட்படுத்தும்காணொளியை எடுத்து அதனை வைத்து 2

## முன்னாள் இராணுவச் சிப்பாய் கத்தியால் குத்திப் படுகொலை

### காதல் விவகாரத்தால் வந்த வினை



முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல் நகரில் இடம்பெற்றுள்ளது.

காதல்விவகாரத்தால் இரு தரப்பினருக்கிடையில் இடம்பெற்ற 2

# தீர்வுக்கான பேச்சு வெற்றி பெறட்டும்

### புத்தாண்டில் சம்பந்தன் பிரார்த்தனை



அரசு ஆரம்பித்துள் தீர்வுக்கான பேச்சு நல்லபடியாகநிறைவேறவேண்டும் என இந்தப் புத்தாண்டில் கடவுளை நான் பிரார்த்திக்கின்றேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

## கஞ்சிப்பான இந்தியாவுக்கு தப்பியோட்டம்



பிரபல பாதாள உலகச் செயற்பாட்டாளராகக் கருதப்படும் கஞ்சிப்பான இம்ரான் இராமேஸ்வரம் ஊடாக இந்தியாவுக்குச் சென்றுள்ளார் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து 'த இந்து' பத்திரிகைசெய்திவெளியிட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பிற குற்றச்சாட்டுகளுக்காக ஒதுக்கப்பட்ட விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கஞ்சிப்பான இம்ரான், சமீபத்தில் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 500 ஊழியர்கள் ஓய்வு பெற்றுள்ளதால் 44 ரயில் சேவைகள் இன்று முதல் இரத்து

ரயில்வேதிணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 500 ஊழியர்கள் ஓய்வு பெற்றுள்ளதால் 44 ரயில் சேவைகள் இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு ஓய்வுபெற்ற ஊழியர்களில் பெரும்பாலானோர் ரயில்களை இயக்குவதில் நேரடியாகத் தொடர்புடையவர்களாவர்.

இன்றைய நிலவரப்படி இவற்றில் கரையோரப் பாதையில் 12 ரயில் சேவைகளும், பிரதான பாதையில் 23 ரயில் சேவைகளும், புத்தளம் பாதையில் 7 ரயில் சேவைகளும், களனி வெளிப் பாதையில் 2 ரயில் சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியைத் தொடரச்செய்யுமாறு ரயில்வே கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு வாய்மொழியாக அறிவுறுத்தப்பட்ட போதிலும் கடந்த இரண்டு 2



## புத்தாண்டுக்கு ஆடைகளை வாங்கச் சென்ற தாயும் மகளும் கோர விபத்தில் பரிதாபப் பலி



ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து நீர்கொழும்பில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

புத்தாண்டுக்கு ஆடைகளை வாங்க மோட்டார் சைக்கிளில் கடைக்குச் சென்ற தாயும் மகளுமே விபத்தில் சிக்கி மரணமடைந்துள்ளனர்என்றுபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பைச் சேர்ந்த 45 வயதுடைய தாயும், 2

## எந்தவொரு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்வரும் சுதந்திர தினத்தில் நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிப்பேன். இதை மட்டுமே என்னால் இப்போது கூற முடியும்.

-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசு ஆரம்பித்துள்ள சர்வகட்சி பேச்சு தொடர்பிலும், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் ஜனாதிபதியிடம் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய பிரத்தியேக கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இடம்பெறுகின்ற கொலைச் சம்பவங்கள், போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளைத் தப்பிக்க வைக்கும் வகையில் குறிப்பிட்ட சில ஊடகங்களில் திரிபுபடுத்தப்பட்ட செய்திகள் வருவதுபோல், அரசு ஆரம்பித்துள்ள அரசியல் தீர்வைக் காண்பதற்கான சர்வகட்சி பேச்சு தொடர்பிலும் முரண்பட்ட தகவல்களை சில ஊடகங்கள் வெளியிடுகின்றன.

நாட்டு மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வை காணும் பயணத்தில் இப்படியான ஆரோக்கியமற்ற செயல்களில் ஈடுபட வேண்டாம் எனக் குறிப்பிட்ட ஊடகங்களிடம் நான் வேண்டிக்கொள்கின்றேன்.

நாட்டு மக்களில் எந்தவொரு தரப்புக்கும் பாதகமில்லாத வகையில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதுதான் எனது இலக்கு. இதை மட்டுமே என்னால் இப்போது கூற முடியும்.

அதிகாரப் பகிர்வு தொடர்பாக சர்வகட்சித் தலைவர்கள் தங்களுக்கு இடையில் ஒன்றுகூடி ஒரு தீர்க்கமான முடிவை விரைந்து எடுக்குமாறு கடந்த சந்திப்பில் கூறிவிட்டேன் - என்றார்.

## தீர்வுக்கான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று பிறக்கின்ற புத்தாண்டு தமிழ் மக்களுக்கு தீர்க்கரமான முடிவுகளை எடுக்கக் கூடிய ஆண்டு. தமிழர் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வகையில் அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அதற்கான பேச்சும் ஜனாதிபதி ரணிலுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாம் விரும்பும் திருப்திகரமான தீர்வை இந்த அரசு முன்வைக்காவிடின் அந்தத் தீர்வை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம். எனவே, தமிழர்களின் கோரிக்கைகளை கவனத்திற்கொண்டு அரசியல் தீர்வை விரைந்து இந்த அரசு காணவேண்டும். இல்லையேல் நாம் தீர்க்கரமான முடிவுகளை எடுப்போம். எம் பக்கம் இருக்கின்ற சர்வதேச நாடுகளுடன் கலந்தாலோசித்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

## புத்தாண்டுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
17 வயதுடைய மகளுமே இதன்போது சாவடைந்துள்ளனர்.

அதேவேளை, ஓட்டோ சாரதியும், அதில் பயணித்த இருவரும் காயமடைந்த நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னாள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வாக்குவாதம் இறுதியில் கத்திக் குத்தில் முடிவடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுப் பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 63 வயதான நான்கு பிள்ளைகளின் தந்தை குருநாகல் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவர் முன்னாள் இராணுவச் சிப்பாய் எனப் பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவரின் உறவினரான யுவதி ஒருவரை அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காதலித்ததால் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதமே இறுதியில் கத்திக் குத்தில் முடிவடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் குருநாகல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுமியை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மிரட்டி தொடர்ச்சியாக அவர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நிவாரணம் வழங்குவதாகத் தெரிவித்து 17 வயதான சிறுமியை இரண்டு தமிழ்ப் பொலிஸார் அழைத்துச் சென்று, யாரும் இல்லாத வீட்டில் வைத்து வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர். அதனைக் காணொலிப் பதிவு செய்து கடந்த இரண்டு ஆண்டுகளாக அதனைக் காண்பித்து அச்சுறுத்தி தொடர்ச்சியாக வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை குறித்த சிறுமி (தற்போது 19 வயது) திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார்.

இதனையடுத்து அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகளின் அடிப்படையிலும் வழங்கப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையிலும், அவர் இரண்டு வருடங்களாகப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது.

பிரதான சந்தேகநபரான தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர், சம்பவம் நடைபெறும்போது வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திலும் பின்பு தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திலும், தற்போது முருங்கன் பொலிஸ் நிலையத்திலும் பணியாற்றி வருகின்றார் எனத் தெரியவருகின்றது.

சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய காணொளியை பாடசாலை மாணவர்களுக்கும் சந்தேகநபர்களான பொலிஸார் அனுப்பியுள்ளனர் எனவும், பாடசாலை மாணவர்களும் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றனர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது - என்றார்.

## 500 உழியர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வருடங்களாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய அனுமதிக்கப்படும் வரை ஓய்வுபெற்ற எந்த ஊழியரும் பணிக்கு வரமாட்டார்கள் என்று ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## கிளிநொச்சியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விநாயகபுரத்தைச் சேர்ந்த தவக்மார் சுரேஸ் (வயது 26) என்ற இளைஞரைக் கத்தியால் குத்தியும், பலமாகத் தாக்கியும் உள்ளனர்.

குறித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் அயலவர்கள் மற்றும் உறவினர்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் இடைவழியிலேயே இறந்து விட்டார் என்று தெரிவிக் கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைக் கிளி நொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நல்வாழ்வு கிட்டுமா?

நம்பிக்கைதான் வாழ்க்கை. நல்லவற்றை எதிர்பார்த்து நம்பிக்கையுடன் வாழ்ந்தாக வேண்டும்.

இன்று பிறந்திருக்கும் புத்தாண்டை ஒட்டித் தாம் வெளியிட்டிருக்கும் வாழ்த்துச் செய்தியில் இத்தகைய வாழ்வுக்கான நம்பிக்கையை ஏற்படுத்தும் விடயங்களையே பேசுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

“எண்ணிலடங்கா சிரமங்கள், நிச்சயமற்ற சூழ்நிலைகள், ஏமாற்றங்களுடனான ஒரு வருடத்தை முடித்துக்கொண்டுள்ளோம்.

“நாம் ஏற்கனவே நெருக்கடியான நிலையைக் கடந்துவிட்டோம் எனக் கருதுகின்றேன். 2023 புதிய ஆண்டு நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு புதிய திருப்புமுனையைக் குறிக்கும் ஒரு தீர்க்மான ஆண்டாக இருக்கும்.”

–என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிடும் கருத்து நோக்கத்தக்கது.

மோசமான ஆண்டாக 2022 கடந்தது என்பது உண்மைதான். இலங்கை வரலாற்றில் அது அத்தகையதாகத்தான் அமைந்தது என்பது மறுக்கப்பட முடியாததே.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறுகின்றமை போல, மோசமான நெருக்கடி கட்டத்தை நாடு தாண்டி விட்டதா, இனி அத்தகைய நெருக்கடி நாட்டுக்கு மீண்டும் வராதா என்பதுதான் கேள்வி.

புதிய நம்பிக்கைகளுடன் நாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களை நிறைவு செய்வது குறித்தும் ஜனாதிபதி பிரஸ்தாபித்திருக்கின்றார்.

அவர் நம்பிக்கை கூறும் பலமான – வாய்ப்பான – எதிர்காலம்தான் நாட்டுக்கும் மக்களுக்கும் காத்திருக்கின்றதா என்பது ஆராயப்பட வேண்டியது.

நாட்டில் பணவீக்கம் பெருகும் வீதம் குறைந்து இருக்கின்றது, விலைவாசி எகிறும் வேகம் சற்று மந்தமடைந்திருக்கிறது என்பதைத் தவிர வேறு நம்பிக்கை தரும் பொருளாதார செய்திகள் கிட்டவே இல்லை.

நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்பதற்காக சர்வதேச நாணய நிதியத்திடம் எதிர்பார்த்த உதவிகள் புத்தாண்டில்தன்னும் கிடைப்பது இன்னும் உறுதியில்லை. மின் வெட்டு, மின்சாரக் கட்டண உயர்வு என்று வாழ்க்கையை நெருக்கடியில் ஆழ்த்தக்கூடிய அபஸ்வரத் தகவல்களே மக்கள் முன் காத்து நிற்கின்றன.

இவற்றிற்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் கூறும் நம்பிக்கை வாழ்வு கிட்டுமா? நாட்டை கடந்த ஏழரை தசாப்த காலமாக உலுப்பி, பெரும் பின்னடைவுக்குள் ஆழ்த்தியிருக்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய – நீதி, நியாயமான – தீர்வு ஒன்றை எட்டாத வரை ஜனாதிபதி கூறும் நம்பிக்கை எதிர்பார்ப்பு வெறும் பகல் கனவுதான்.

# மின்கட்டண இணையதளத்தை ஹேக் செய்து பணம் மோசடி!

## இளைஞர் கைது

மின்சார கட்டணம் செலுத்துவதாகக் கூறி 10 கோடி ரூபாவை மோசடி செய்த நபர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் கசினோ விளையாட்டுகளுக்கு தீவிரமாக அடிமையான 24 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த இளைஞன் கொழும்பில் உள்ள பிரபல கசினோ நிலையம் ஒன்றுக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளமையுடன் விசாரணையின் போது இராணுவ விசேட அதிரடிப் படையில் இருந்து தப்பிச் சென்ற முன்னாள் இராணுவ வீரர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கசினோவிற்கு வருகை தரும் வர்த்தகர்களின் மின் கட்டணத்தை செலுத்துவதாக கூறி ஏமாற்றி வந்துள்ளார் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

லட்சக் கணக்கான ரூபா மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டியவர்கள் குறிப்பிட்ட கையடக்கத் தொலைபேசி விண்ணப்பம் மூலம் செலுத்தினால் 20 வீதம் தள்ளுபடி பெற்றுக் கொள்ளலாம் என்று கூறி மோசடி செய்துள்ளார் எனக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தேகநபர் இணையம் மூலம் பணம் பெற்று மின்கட்டணத்தை செலுத்தியதை சரிபார்க்கும் வகையில் மின்சார வாரியத்தின் கட்டணத்தை இணையத்தினூடாக செலுத்தும் மூன்றாம் தரப்பு நிறுவனத்தின் கணக்கை ஹேக் செய்துள்ளார். இதேவேளை, மின்சார சபையின் இணையத்தளத்திலும் கட்டணம் செலுத்தப்பட்டதாக புதுப்பிக்க பட்டாலும் தரவு தளத்துக்குப் பணம் மாற்றப்படவில்லை.

மேலும் விசாரணையில் இணையத் தளங்களை ஹேக் செய்வது எப்படி என்பதை அவரே கற்றுக்கொண்டுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

60 லட்சம் ரூபாவிற்கு மேல் மோசடி செய்துள்ளார் எனவும் அந்தப் பணத்தில் கசினோ விளையாட்டில் ஈடுபட்டார் எனவும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூக ஊடக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபருடன் தொடர்புடைய மேலும் பல தரகர்களைக் கைது செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# 14 வயதான மாணவி மீது பாலியல் துஷ்பிரயோகம் மததலமொன்றின் தலைவர் உட்பட நால்வர் கைது!

மொனராகலை தொம்பகஹவெல பிரதேசத்தில் 14 வயது பாடசாலை மாணவியை வன்புணர்வு செய்த சம்பவம் தொடர்பில் அந்தப் பிரதேசத்தில் மத ஸ்தலமொன்றின் தலைவர் உட்பட நால்வரை தொம்பகஹவெல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜா- எல பிரதேசத்தை சேர்ந்த குறித்த மாணவி , தொம்பகஹவெல பிரதேசத்தை சேர்ந்த தனது உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்த, காலப்பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளமை பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

அவர் தனது உறவினர் இருவரின் உதவியுடன், சம்பந்தப்பட்ட மதஸ்தலமொன்றின் தலைவர் அங்கு வைத்து சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

மேலும், சந்தேகத்தில் கைதான தலைவரின் சகோதரர் ஒருவரும் மாணவியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நால்வரில் இருவர் குறித்த மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த உடந்தையாகவிருந்த மாணவியின் உறவினர்களாவர்.

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்தார் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி!



யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுவர்ண போதொட்ட, கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று (சனிக்கிழமை) சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், அண்மைக்காலமாக அதிகரித்துள்ள மாடுகள் திருட்டு, போதைப்பொருள் பாவனை, வாள் வெட்டு உட்பட்ட சமூக விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விடயங்கள் பேசப்பட்டன.

இதன்போது மேலும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையில், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கின்ற காணிகளை விடுவித்தல் பற்றியும் பாடசாலை மைதானம் போன்ற பொது இடங்களை புனரமைப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பிரஸ்தாபிக்கப்பட்டது.

# அவசர காலக் கொள்முதல் விதிமுறைகளை மீறவில்லை!

## கெஹலிய கூறுகிறார்



அவசரகால மருந்துகளைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளின் போது அவசரகால கொள்முதல் விதிமுறைகளை மீறவில்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபையின் அங்கீகாரம் பெறாத நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தம் கோராமல் மருந்துகளை இறக்குமதி செய்வதாக முன்னிலை சோசலிசக் கட்சி குற்றம் சுமத்தியிருந்தது. இந்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் போதே சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# முன்னாள் பாப்பாண்டவரின் இறுதிச் சடங்கு 5 ஆம் திகதி

வாடிகன், ஜன.01

முன்னாள் பாப்பாண்டவர் 16 ஆவது பெனடிக் உடல் நலக்குறைவால் தனது 95ஆவது வயதில் நேற்றுக் காலமானார். அவரது இறுதிச் சடங்கு ஜனவரி 5 ஆம் தேதி வத்திக்கானில் நடைபெறும்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவராக கடந்த 2005 முதல் 2013 வரை இருந்த 16 ஆம் பெனடிக்ட் கடந்த 2013ஆம் ஆண்டு தாமாக போப் ஆண்டவர் பதவியில் இருந்து விலகினார்.

முன்னாள் பாப்பாண்டவரைப் பாராட்டிய டஜன் கணக்கான தலைவர்களில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் மற்றும் பிரிட்டிஷ் மன்னர் சார்லஸ் ஆகியோரும் அடங்குவர்.

பெனடிக்ட் உடல்நலக் குறைவு காரணமாக 2013 இல் ராஜினாமா செய்தார் – 600 ஆண்டுகளில் அவ்வாறு செய்த முதல் பாப்பாண்டவர் அவர்தான்.

அவரது மரணம் குறித்த அறிவிப்பு வெளியான சில மணி நேரங்களுக்குப் பிறகு, பாப்பாண்டவர் பிரான்சிஸ், அவரது அன்பான முன்னோடியைப் புகழ்ந்து, திருச் சபையின் நன்மைக்காக அவர் செய்த தியாகங்களை வலியுறுத்தினார்.

பதவியைத் துறந்த பின்பு அவர் வத்திக்கானில் உள்ள குருமடத்தில் தங்கி ஓய்வெடுத்து வந்தார். 95 வயதாகும் அவருக்கு கடந்த சில நாள்களாக உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதற்காக வாடிகன் மருத்துவம னையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த ஓய்வுபெற்ற பாப்பாண்டவர் 16 ஆம்வ்பெனடிக்ட்டின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக கடந்த சில நாள்களுக்கு முன்பு மருத்துவமனை நிர்வாகத்தி னர் தெரிவித்தனர்.

இந்நிலையில், முன்னாள் பாப்பாண்டவர் 16 ஆம் பெனடிக்ட் நேற்று சிகிச்சை பலனின்றி காலமானார். இதுகுறித்து வத்திக்கான் செய்தித் தொடர்பாளர் மேட் டியோ புரூனி வெளியிட்டுள்ள அறிக்கையில்,போப்



ஆண்டவர் 16 ஆம் பெனடிக் இன்று(நேற்று) காலை 9:34 மணிக்கு வத்திக்கானில் உள்ள மேட்டர் எக்லேசியா மடாலயத்தில் காலமானார் என்பதை வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டிருந்தது.



## கொரோனாவினால் சீனாவுக்கு மிகக் கடுமையான சவால்கள்

### வெற்றி கொள்வோம் என்கிறார் அதிபர் ஜின்பிங்

பெய்ஜிங், ஜன.01

சீனாவில் கடந்த சில வாரங்களாக கொரோனா புது வகையான பி.எவ்.7 நோய்த்தொற்று

வேகமாகப் பரவி வருகிறது. இதனால் தினமும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன எனவும், கொரோனாவால் பலர் இறந்து வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது. ஆனால் இது குறித்து எந்த வித தகவல் களையும் சீனா தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் சீன அதிபர் ஜி ஜின்பிங், புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றினார். அப்போது பேசிய அவர், அசாதாரண முயற்சிகளால், நாம் முன்னெப்போதும் இல்லாத சிரமங்களையும் சவால்களையும் வென்றுள்ளோம், இது யாருக்கும் எளிதான பயணமாக இருக்கவில் லை என்று குறிப்பிட்டார். மேலும் கொரோனாவிற்கு எதிரான போரில் சீனா தற்போது புதிய கட்டத்தை எட்டியுள்ளது என்றும், இதில் சீனாவிற்கு கடுமையான சவால்கள் உள்ளன என்றும் ஜின்பிங் தெரிவித்தார். மேலும் சீன மக்களின் முன்னே நம்பிக்கையின் ஒளி உள்ளது என்றும் விடாமுயற்சி, ஒற்றுமை மூலம் கஷ்டங்களை கடந்து வெற்றி பெறுவோம் என்றும் அதிபர் ஜின்பிங் கூறினார். இருப்பினும் தனது உரையின் போது சீனாவில் தற்போதைய கொரோனா பரவல் குறித்த தரவுகள் எதையும் அவர் வெளியிட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சிரியாவில் எண்ணெய் வயல் தொழிலாளர் மீது பயங்கரவாதிகள் தாக்குதல்; பன்னிருவர் சாவு!

சிரியா.ஜன.01

சமீபகாலமாக ஈராக் மற்றும் சிரியாவில் மீண்டும் ஐ.எஸ். பயங் கரவாதிகளின் கைப்ஓங்கி வருகிறது. அப்பாவிப் பொதுமக்களை குறி வைத்து அடிக்கடி பயங்கரவாதத் தாக்குதல்களைச்வர்கள் அரங்கேற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் சிரியாவின் டெய்ர் அஸ் ஜோர் மாகாணத்தில் உள்ள எண்ணெய் வயலில் பணி யாற்றும் தொழிலாளர்கள் பலர் வேலை முடிந்து 3 பஸ்களில் வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டி ருந்தனர்.

அப்போதுப்அந்த பஸ் கள் செல்லும் பாதையில் வெடிகுண் டுகளை மறைத்து வைத்திருந்த பயங்கரவாதிகள் பஸ்கள் அந்த பகுதி க்கு வந்ததும் வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்தனர்.

பயங்கரச் சத்தத்துடன் குண்டுகள் வெடித்து சிதறியதில் 3 பஸ்களும் சின்னாபின்னமாகின. அதன் பின்னரும் பயங்கரவாதிகள் பஸ்கள் மீது சரமாரி துப்பாக்கிச் சூடும் நடத்தி னர். இந்தக் கொடூரத் தாக்குதலில் 12 தொழிலாளர்கள் சம்பவ இடத்தி லேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பல தொழிலாளர்கள் படு காயம் அடைந்தனர். இந்த தாக்குத லுக்கு உடனடியாக எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற் கவில்லை என்று தெரிவிக்கப்ப டுகின்றது.







# தென்கொரியாவை நோக்கி 24 மணி நேரத்தில் நான்கு ஏவுகணைகளை ஏவியது வடகொரியா!



சியோல், ஜன.01

வடகொரியா தன்னிடம் இருக்கும் அணு ஆயு தங்களை கொண்டு பிராந்திய எதிரி நாடுகளான தென்கொரியா மற்றும் ஜப்பானை நீண்டகாலமாக அச்சுறுத்தி வரு கிறது.

இந்த நிலையில் நேற்று வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஒரே நாளில் 3 ஏவுகணைகளை சோதித்து அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளை அதிர வைத்தது. அவை 350 கி.மீ. தூரத்துக்கு பறந்து சென்று, கொரிய தீபகற்பத்திற்கும் ஜப்பானுக்கும் இடையிலான கடல் பகுதியில் விழுந்தன. முதற்கட்ட மதிப்பாய் வின் அடிப்படையில் 3 ஏவுகணை களும் தென்கொரியாவை இலக் காகக் கொண்டு சோதிக்கப்பட்டன எனத் தெரிய வந்திருப்பதாக தென்கொரியா கூட்டுப்படை களின் தலைமை தெரிவித்தது.

இதனை தொடர்ந்து ஆங்கில வருடப்பிறப்பான இன்றும் பியாங்யாங்கில் இருந்து உள்ளூர் நேரப்படி அதிகாலை 2:50 மணியளவில் குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணை ஏவப்பட்டதாக தென் கொரியாவின் கூட்டுப் படை தெரிவித்து உள்ளது. வட கொரியா தனது ஆயுத சக்தியை நவீனப்படுத்தவும், எதிர்காலத்தில் அமெ ரிக்காவை விட தனது செல்வாக்கை அதிகரிக்கவும் முயற்சிப்பதாக சில நிபுணர்கள் கூறுகின்றனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு, 2017 ஆம் ஆண்டுக்கு பிறகு முதல் முறையாக வடகொரியா தென்கொரியாவுக்குள் 5 டிரோன்களை அனுப்பியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யது. பதிலுக்கு தென் கொரியாவும் 3 ஆளில்லா விம னத்தை பறக்கவிட்டதாக தெவித்து இருந்தது. வட கொரியாவின் அணு ஆயுதங்களைக் கண்டு தென் கொரியா பயப்படக் கூடாது என்றும், வட கொரியாவின் எந்தவொரு ஆத்திரமூட்டலுக்கும் தென் கொரியா உறுதியுடன் பதிலடி கொடுக்க வேண்டும் என்றும் தென் கொரிய அதிபர் யூன் சுக் யோல் கூறி இருப்பது குறிப் பிடத்தக்கது.

# ரூ.7.39 கோடி மதிப்பு போதைப் பொருள்கள் மிசோரமில் நடந்த சோதனையில் பறிமுதல்!




கவுகாத்தி, ஜன.01

மிசோரம் மாநிலத்தில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட சோதனையில் இந்திய மதிப்பில் ரூ.7.39 கோடி மதிப்பிலான போதைப்பொருள் மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைப்பற்றப்பட்ட பொருட்களான மெத்தம்பேட்டமைன் மாத்திரைகள், ஹெராயின் மற்றும் வெளிநாட்டு சிகரெட்டுகள் மியான்மரில் இருந்து கடத்தப்பட்டவை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், சோதனைகளின் போது ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐஸ்வால் மாவட்டத்தில் உள்ள துய்குர்ஹ்லுவில் நடந்த சோதனையின் போது, 6.66 கோடி ரூபா மதிப்புள்ள 20,000 மெத்தம்பெட்டமைன் மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. மற்றொரு நடவடிக்கையில், மியான்மர் எல்லையில் உள்ள சம்பாய் மாவட்டத்தில் உள்ள சோகாவ்தர் கிராமத்தில் ரூ.41.60 லட்சம் மதிப்புள்ள வெளிநாட்டு சிகரெட்டுகளை அசாம் ரைபிள்ஸ் படை கைப்பற்றியது.

மியான்மரின் எல்லை வழியாக மிசோரமிற்கு அதிக அளவில் மெத்தம்பேட்டமைன் மாத்திரைகள் மற்றும் பல்வேறு போதைப்பொருள்கள் கடத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## 2024 இல் மக்கள் மருந்தகங்களின் எண்ணிக்கையை பத்தாயிரமாக உயாத்துவதற்கு இந்திய அரசு எத்தனம்




புதுடெல்லி,ஜன.01

இந்நதியாவில் சாதாரண மக்களுக்கு – குறிப்பாக ஏழைகளுக்கு – மலிவு விலையில் தரமான மருந்துகளை வழங்குவதற்கான தொலைநோக்குப் பார்வையுடன், இந்தியப் பிரதமரின் பாரதிய மக்கள் மருந்தக திட்டம் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், மலிவு விலையில் மருந்துப் பொருள்களை விற்பனை செய்து வரும் மக்கள் மருந்தகங்களின் எண்ணிக்கையை 2024 ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் 10,000 ஆக உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

கடந்த 2017 ஆம் ஆண்டில் மக்கள் மருந்தகங்களின் எண்ணிக்கை 3,000 ஆக அதிகரித்தது. கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச்சில் அந்த எண்ணிக்கை 6,000 ஆனது. கடந்த நிதியாண்டு இறுதியில் மருந்தகங்களின் எண்ணிக்கை 8,610 ஆக இருந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை 9,000ஐ எட்டியுள்ளது.

நாட்டில் மொத்தமுள்ள 766 மாவட்டங்களில், மக்கள் மருந்தகங்கள் 743 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. மருந்தகங்களின் எண்ணிக்கையை 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் 10,000 ஆக உயாத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'கொலை செய்வது எப்படி?' என கூகுளில் தேடி மனைவியைக் கொலை செய்தவர் சிக்கினார்!




புதுடெல்லி, ஜன.01

உத்தரப் பிரதேசத்தில் 'கொலை செய்வது எப்படி?' என்று கூகுளில் தேடி மனைவியைக் கொலை செய்த நபரை கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காஜியாபாத்தில் உள்ள மோடிநகரில் வசிக்கின்ற விகாஸ் என்பவர் தனது மனைவி சோனியாவிடம் கடந்த வெள்ளிக்கிழமை ஹாபூர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் கொள்ளையடிக்கப்பட்டதாக விகாஸ் பொலிசில் தெரிவித்துள்ளார். இதையடுத்து

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், சோனியா கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்டு, சந்தேகத்தின் பேரில் விகாஸைக் காவலில் எடுத்து விசாரித்தனர்.

விகாஸின் தொலைபேசியைப் பரிசோதித்ததில், அவர் கூகுளில் 'கொலை செய்வது எப்படி?', 'எங்கிருந்து துப்பாக்கி வாங்கலாம்?' என்பன போன்ற இணையத் தேடல்களை மேற்கொண்டிருப்பது தெரிய வந்தது. மேலும் இணைய வழி விற்பனை நிறுவனமான பிளிப்கார்ட்டில் இருந்து விம் வாங்க முயன்றதும் தெரிய வந்தது.

திருமணமான சில ஆண்டுகளுக்குப் பிறகு, குறித்த நபருக்கும் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு இருப்பது தெரிய வந்ததால் சோனியாவுக்கும் விகாஸுக்கும் இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் விகாஸ் சோனியாவைக் கொலை செய்ய அவரது பெண் தோழியுடன் இணைந்து திட்டம் தீட்டியுள்ளார். இந்த நிலையில் விகாஸ் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், அவரது பெண் தோழியை விரைவில் கைது செய்வோம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தை கண்டுபிடித்த பொலிஸ் குழுவினருக்கு ரூ.25 ஆயிரம் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

## ஆறு நாடுகளில் இருந்து இந்தியா வரும் பயணிகளுக்கு இனி கொரோனாப் பரிசோதனைச் சான்றிதழ் அவசியம்




புதுடெல்லி, ஜன.01

சீனா, ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து, ஹாங்காங் ஆகிய நாடுகளில் கொரோனாப் பரவல் அதிகரித்துள்ளதை அடுத்து அந்த நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வருகை தரும் பயணிகள் கொரோனாப் பாதிப்பின்மை சான்றிதழை வழங்க வேண்டியது கட்டாயம் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

புதிய கட்டுப்பாடு இன்று ஜனவரி 1 முதல் அமுலுக்கு வருகிறது. பயணத்தைத்தொடங்குவதற்கு 72மணிநேரத்துக்கு முன்பாக எடுக்கப்பட்ட கொரோனாப் பரிசோதனைச்அறிக்கையை ஏர் சுவிதா வலைதளத்தில் பதிவேற்ற 6 நாடுகளின் பயணிகளுக்கும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் மேற்கண்ட நாடுகளுக்கு விமானங்களை இயக்கும் நிறுவனங்களுக்கான புதிய வழிகாட்டுதல்களை மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சகம் வழங்கியுள்ளது. அதில் சீனா, சிங்கப்பூர், ஹாங் காங், தென் கொரியா, தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வருகை தரும் பயணிகள் ஏர் சுவிதா வலைதளத்தில் கொரோனா பாதிப்பின்மை சான்றிதழை பதிவேற்றும் நடைமுறையை மத்திய அரசு இன்று (ஜனவரி 1) முதல் கட்டாயமாக்கியுள்ளது.

அத்துடன் கொரோனா தொற்றால் பாதிக்கப்படவில்லை என்ற உறுதிமொழி படிவத்தையும் பயணிகள் வழங்க வேண்டும். அவற்றை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட நாடுகளின் பயணிகளுக்கு அனுமதி சீட்டு வழங்கும் நடைமுறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். பயண அனுமதிச் சீட்டு வழங்கும் போது உரிய சான்றிதழைப் பயணிகள் பதி வேற்றியுள்ளார்களா என்பதை விமான நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சுற்றறிக்கையானது அனைத்து வர்த்தக விமான நிறுவனங்கள், விமான நிலைய நிர்வாகிகள், மாநிலங்களின் தலைமை செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

# இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களின் வகிபாகம்

## அட்டாளைச்சேனையில் கலந்தாய்வு





(நூருல் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்)

சமூக நடவடிக்கைகள், துறைசார் அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சிக்கான மையம் ஏற்பாடு செய்த இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம் சமூகத்தின் வகிபாகம் தொடர்பிலான கலந்துரையாடல் ஆராய்ச்சிக் கான மையத்தின் தலைவர் அதிபர் எம்.ஜே.எம் அன்வர் நௌசாத் தலைமையில் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

வை.எம்.எம்.ஏயின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் அதிபர் எம்.ஐ.எம். றியாஸின் ஆரம்ப உரையுடன் தொடங்கிய இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாச்சார பீடத்தின் அரசியல் விஞ்ஞான துறைத்தலைவர் பேராசிரியர் எம்.ஏ.எம். பௌசர், கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் எம்.ஐ. சதாத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் இனமுரண்பாடுகளில் முஸ்லிம் தலைவர்கள் நடந்து கொண்ட விதங்கள், கடந்த காலங்களில் முஸ்லிம் சமூகம் தவறவிட்ட தீர்வுகள், முஸ்லிம் அரசியலின் போக்குகள், அரசியல் தலைவர்களின் நடவடிக்கைகளில் சமூகம் அடைந்த இலாப நட்டங்கள், இன ஒற்றுமை, சமஷ்டி, அரசியல் தீர்வில் முஸ்லிம்களின் எதிர்பார்ப்பு, அபிலாஷை போன்ற பல விடயங்களை தனது கருத்துரைகளில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதி செயலாளர் நாயகமும், அட்டாளைச்சேனை பிரதேச சபை முன்னாள் தவிசாளருமான சட்டத்தரணி எம்.ஏ. அன்ஸில், கிழக்கின் கேடயம் பிரதானியும், அனைத்துப்பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவருமான அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் எஸ்.எம். சபீஸ், அல்- மீஸான் பௌண்டன் ஸ்ரீலங்காவின் தவிசாளரும், என்.டி.பி.எச். ஆரின் தேசிய கொள்கைப்பரப்புச் செயலாளருமான யூ.எல்.என். ஹுதா, 'நாம் ஊடகர் பேரவை'யின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான யூ.எல். மப்ரூக் ஆகியோர் விளக்கினர்.

இந்தக் கலந்துரையாடலில் அட்டாளைச்சேனை பிரதேச சபை உப தவிசாளர் சட்டமானி எஸ்.எம்.எம். ஹனீபா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர், ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எம்.சி.புஹாரி, அட்டாளைச்சேனை அனைத்து பள்ளிவாசல் சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ். ஜுனைதீன், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் யு.எம்.வாஹிட், அரச சார்பற்ற நிறுவனங்களின் தவிசாளர் எஸ்.எம். லாபீர், என்.டி.பி.எச்.ஆரின் உச்சபீட உறுப்பினர் எம்.என்.எம். அப்ராஸ், அம்பாறை மாவட்ட இளைஞர் சம்மேளன தலைவர் எம்.எம். ருக்ஸான், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்களின் பிரதானிகள், பாடசாலை அதிபர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், ஊடக அமைப்புகளின் தலைவர்கள், சமூக செயற்பாட்டா ளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## கிழக்கில் போதைப்பொருளின் பாவனையை கட்டுப்படுத்துவது பற்றிக் கலந்துரையாடல்!





(வி.ரி. சகாதேவராஜா)

பாடசாலைகளில் மாணவர் மத்தியில் போதைவஸ்து பாவனை அதிகரித்து வருவதையொட்டி மாகாண கல்வித் திணைக்களம் கலந்துரையாடலொன்றை நேற்று நடாத்தியது.

கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் தலைமையில் இந்த கலந்துரையாடல் இடம் பெற்றது.

அங்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் பிரதான அதிதியாக கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திசாநாயக்க சிறப்பதிதியாக கலந்துகொண்டார். மாணவர் மத்தியிலே போதை வஸ்து பாவனையை முற்றாக ஒழிக்குமுகமாக அங்கு கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இந்த வருடம் பாடசாலையிலே அந்தத் திட்டங்களை அமல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## புளியந்தீவு புனித மரியா பேராலயத்தில் புத்தாண்டு பிரதான நள்ளிரவு ஆராதனை

உலகமெங்கும் வாழும் மக்கள் பிறந்துள்ள புத்தாண்டை வெகு விமர்சையாகக் கொண்டாடி வருகின்றனர். புத்தாண்டுக்கான நள்ளிரவு ஆராதனைகள் நாடெங்கும் தேவாலயங்களில் சிறப்பாக நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் புத்தாண்டுக்கான நள்ளிரவு ஆராதனை, பிரதான வழிபாடு மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்றது. ஈஸ்டர் தாக்குதல், கொவிட் நிலைமைகள் காரணமாக கடந்த ஆண்டுகளில் மட்டுப்படுத்தப் பட்டிருந்த புத்தாண்டுக்கான நள்ளிரவு ஆரா தனை வழிபாடுகள் இம்முறை சிறப்பாக நடைபெற்றன.

மட்டக்களப்பு – அம்பாறை மறை மாவட்ட ஆயர் பொன்னை யோசப் தலைமையில் ஆலய பங்குத்தந்தை ஜோர்ஜ் ஜீவராஜ் உட்பட பங்குத் தந்தைகளினால் இந்த வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

புத்தாண்டுக்கான நள்ளிரவு ஆராதனையில் நாட்டு மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் நல்லாசி வேண்டி திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. மேலும் புத்தாண்டை குறிக்கும் பாடல்கள் இசைக்கப்பட்டன. புத்தாண்டு நல்லாசி உரைகளும் இடம் பெற்றன. இப் புத்தாண்டு நள்ளிரவு ஆராதனைகளில் பெரும் எண்ணிக்கையான கிறிஸ்தவ மக்கள் கலந்து கொண்டனர்.

## 'அறநெறிக் கலைஞர்' பத்மவாசனுக்கு விருது

(வேதசகா)

அம்பாறை மாவட்ட சிவநெறி மன்றம் உலகப் புகழ்பெற்ற ஓவியர் மு. பத்மவாசனுக்கு 'அறநெறிக் கலைஞர்' பட்டம் வழங்கி கௌரவித்தது.

உலக புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் அறநெறி மாணவர்களின் கலை ஆர்வத்தை வளக்கவும் சமய நன்நெறியை விருத்தி செய்யவும் நற்பணியாற்றி வருகின்றார். அவரது ஓவியங்கள் அறநெறிச்சார் நன்நெறிக் கதைகளுக்கு உறுதுணையாய் அமைகின்றன. இந்தப் பணியை பாராட்டி அம்பாறை மாவட்ட அறநெறிப்பாடசாலைகள் சார்பில் 'அறநெறிக் கலைஞர்' என்னும் பட்டம் வழங்கி கௌவித்தது.

காரைதீவு விபுலானந்தா ஞாபகார்த்த மணி மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பணிமன்ற முன்னாள் தலைவர் வி.ரி.சகா தேவராஜா ஓவியர் பத்மவாசனுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

அம்பாறை மாவட்ட சிவநெறி அறப்பணி மன்றம் (கல்முனை) சார்பில் மன்ற தலைவர் சைவப்புலவர் யோ.கஜேந்திரா வாழ்த்துப் பத்திரத்தை வாசித்து கையளித்தார். அம்பாறை மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜியும் உடனிருந்தார்.





# நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு புதிய திருப்புமுனையை தீர்மானிக்கின்ற ஆண்டாக 2023 ஆம் ஆண்டு இருக்கும்!




## ஜனாதிபதி ரணில் நம்பிக்கை

பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

எனினும் பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுதலையடைந்த ஏனைய நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றத்தை நாம் இன்னும் அடையத் தவறிவிட்டோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள வாழ்த்து செய்தியிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

முன்னெப்போதும் இல்லாதவாறு நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியில் நம் அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பாரிய சுமை மற்றும் நம்மில் பெரும்பாலானோர் சந்தித்த பின்னடைவு ஆகியவற்றை நான் நன்கு அறிவேன்.

எனினும், நாம் ஏற்கனவே நெருக்கடியான நிலையைக் கடந்துவிட்டதாகக் கருதுகின்றேன். 2023 புதிய ஆண்டு நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு புதிய திருப்புமுனையைக் குறிக்கும் ஒரு தீர்க்கமான ஆண்டாக இருக்கும்.

புதிய நம்பிக்கைகளுடன் நாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்து வளமான இலங்கைக்கான கதவுகளைத் திறக்கும் வெற்றிகரமான ஆண்டாக இந்தப் புத்தாண்டு அமைய வேண்டுமென பிரார்த்திக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் ஒளிமயம் மிக்கதான எதிர்காலத்தை சம உரிமையின் மூலமே உருவாக்க முடியும்!

## புத்தாண்டு வாழ்த்தில் திஸ்ஸ வித்தாரண



அனைத்து இன மக்களும் ஐக்கிய இலங்கையில் சம உரிமைகளுடன் வாழும் சூழ்நிலையை ஏற்படுத்துவதன் மூலமே இந் நாட்டில் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க முடியும் என லங்கா சமசமாஜக் கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தனது புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

கடந்த வருடம் நாட்டில் ஆட்சிமாற்றம் வேண்டும் எனக் கோரி போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால் ஆட்சி மாற்றத்துக்கான எந்த செயற்பாடும் இடம் பெறவில்லை. அதற்கு மாறாக நாட்டில் பசியும் பஞ்சமும் அதிகரித்துள்ளது.

அது மட்டுமல்லாது அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. இதனோடு காலங்களும் கரைந்தோடிக் கொண்டிருக்கின்றனவே தவிர கண்ட பலன் எவுதுவும் இல்லை.

எமது எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. நாட்டை வழிநடத்தும் அரசியல் தலைமைப் பீடம் சரியாக செயற்படவில்லை. அதனால் பெரும்பாலான இளைஞர் யுவதிகள் வெளிநாடு செல்கின்றனர்.

தற்போதைய ஆட்சியாளர்களிடத்தில் நாட்டை முன்னேற்றக் கூடிய உருப்படியான செயற்றிட்டம் எதுவும் இல்லை.

வறுமை உருவாக்கப்பட்டு எமது நாட்டை வெளிநாட்டவருக்கு தாரைவார்க்க மறைமுக நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. எமது நாட்டு மக்கள் வெளிநாட்டின் அடிமைகளாக வேண்டுமா என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்.

ஆகவே இன்றைய ஆட்சியை அகற்ற மக்களுக்கு இப்புத்தாண்டில் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. நடைபெறவுள்ள தேர்தல்களில் தற்போதைய அரசைத் தோற்கடித்து மக்கள் தேர்வு செய்யும் அரசாங்கத்தினூடாகப் பொருளாதாரக் கஷ்டம் இன்றி இலங்கையர் என்ற அடையாளத்துடன் வாழ மகிழ்ச்சியான ஆண்டாக இவ்வருடம் மலர வேண்டும் என பிரார்த்திப்பதாகத் தெரிவித்துள்ளார்.



# 2023 புத்தாண்டை அனைவரும் அர்ப்பணிப்புடன் எதிர்கொள்க!

## பிரதமர் தினேஷ் வாழ்த்து

பல சவால்களுக்கு மத்தியிலும் சிறந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் புத்தாண்டை எதிர் கொள்ளவேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக உணவு பாதுகாப்பு மற்றும் கிராமிய பொருளாதார மறுமலர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து அனைத்து துறைகளிலும் வளர்ச்சியை அடைய அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

2022 ஆம் ஆண்டு பெரும்பாலான மக்களுக்கு கடினமாக இருந்த போதிலும், பல சவால்களுக்கு மத்தியிலும் சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப இந்த புதிய ஆண்டில் ஒன்றிணைய வேண்டும் என்றும் தனது புத்தாண்டு செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் இந்த புத்தாண்டில் வளமான நாட்டை உருவாக்குவதில் முக்கிய பங்குவகிக்கும் உள்ளூர் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கான உத்திகளைப் பின்பற்றவேண்டும் என்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.




# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மன்னாரில் புத்தாண்டு திருப்பலி!

மன்னார் மறை மாவட்டத்தில் புத்தாண்டு நள்ளிரவு திருவிழா மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

நேற்று (சனிக்கிழமை) இரவு 11.45 மணிக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன்போது திருப்பலியின் ஆலயத்துக்குப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் விசேட பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

மேலும் இந்தத் திருப்பலியில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொன்சியூலர் சேவை கட்டணத்தில் திருத்தம்

கொன்சியூலர் சேவைகளுக்கான கட்டணத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, 16.11.2022 திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி எண்.2306/35 இன் படி, வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரங்கள் பிரிவு, பிராந்திய தூதரக அலுவலகங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் பதவிகளின் சான்றிதழ்கள்/ஆவணங்களைச் சான்றளிப்பதற்கான கட்டணங்கள் திருத்தப்பட்டுள்ளன.

இந்த திருத்தம் ஜனவரி 1, 2023 முதல் நடைமுறைக்கு வரும்.

கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரங்கள் பிரிவு மற்றும் அதன் பிராந்திய தூதரக அலுவலகங்கள் மூலம் சான்றிதழ்கள்/ஆவணங்களை சான்றளிப்பதற்கான புதிய கட்டண அமைப்பு பின்வருமாறு: –

பரீட்சைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பரீட்சை சான்றிதழ்கள் – 800.00

ஒரு வெளிநாட்டுப் பிரஜைக்காக இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படும் எந்தவொரு ஆவணமும் – 3000.00 எந்த ஏற்றுமதி ஆவணம் – 8000.00 வேறு எந்த ஆவணம் – 1200.00

வெளிநாட்டு இலங்கையர்களுக்குப் பொருந்தும், திருத்தப்பட்ட கட்டணக் கட்டமைப்புகளுக்கு 16.11.2022 திகதியிட்ட அதிவிசேட வர்த்தமானி எண்.2306/35ஐப் பார்க்குமாறு அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

# மக்கள் வங்கி ஏ.டி.எம். இயந்திரங்களில் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகம் திருட்டு!

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்கள் வங்கி கிளைகளின் ஏ.டி.எம். இயந்திரங்களில் சுமார்ஒருகோடிக்கும்அதிகபணம்திருடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வெள்ளிக்கிழமை (டிசெ. 30) அதிகாலை ஹிக்கடுவை, காலி, பத்தேகம ஆகிய நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள ஏ.டி.எம். இயந்திரங்களிலிருந்து முறையே 46 லட்சத்து 80 ஆயிரம் ரூபா, 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா மற்றும் 57 லட்சம் ரூபா பணம் இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

அதிகாலையில் இந்த ஏ.டி.எம். இயந்திரங்களுக்கருகில் வருகை தந்த வெளிநாட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் பிரஜைகளால், அங்கு காணப்பட்ட சி.சி.டி.வி. கமெராக்களை செயழிக்கச் செய்து, ஏ.டி.எம். இயந்திர தரவுகளை மாற்றி இவ்வாறு பணத்தை திருடப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த மூன்று பிரதேசங்களிலுமே ஒரு முறையில் பணம் திருடப்பட்டுள்ளமையால், ஒரே தரப்பினரே அனைத்து திருட்டுடனும் தொடர்புபட்டுள்ளனர் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அதனை அடிப்படையாகக் கொண்டு ஹிக்கடுவை, காலி, பத்தேகம உள்ளிட்ட பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.01.2023 இல் வெளியிடப்பெற்றது.